**4.3.2015**

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### போடியில் பலத்த மழை: கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு

போடி பகுதியில் செவ்வாய் கிழமை பெய்த பலத்த மழையினால் கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. போடி பகுதியில் கடந்த சில வாரங்களாகவே வெயில் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்களும் விவசாயிகளும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் திங்கள் கிழமை போடி பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து செவ்வாய் கிழமை போடி பகுதியில் பலத்த மழை பெய்தது.

மாலை முதலே தொடர்ந்து மழை பெய்தது. மேலும் போடியின் வடமேற்கு பகுதியில் குரங்கனி, முந்தல், கொட்டகுடி பகுதியிலும் பலத்த மழை பெய்தது. இதனால் போடி கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. போடி நகரில் பெய்த மழையினால் சாலைகளில் தண்ணீர் ஓடியது. ஏற்கனவே சில மாதங்களுக்கு முன் பெய்த மழையினால் கொட்டகுடி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்நிலையில் வெயில் அதிகரித்ததால் கொட்டகுடி ஆறு காய்ந்து போய் காணப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் மழை பெய்து வருவதால் கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால் முந்தல், மேலப்பரவு உள்ளிட்ட பகுதி விவசாயிகள் விவசாய பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்கி அதிக வருவாயை ஈட்ட வேண்டும்: ஆட்சியர் வே.ராஜாராமன்



அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்கி அதிக வருவாய் ஈட்டி தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டார். விருதுநகர் அருகே கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில் அம்மா பண்ணை மகளிர் மற்றும் உணவு பாதுகாப்பு குழுக்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. இதில், ஆட்சியர் வே.ராஜாராமன் பங்கேற்று பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசுகையில், தமிழக முதல்வர் மகளிர் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதில், அம்மா பண்ணை மகளிர் குழு அமைத்தும், அவர்களுக்கு குழு அமைப்பு, நிர்வாக செயல்பாடுகள் தொடர்பான விரிவாக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வேளாண் விளை பொருள்களான கம்பு, சோளம், குதிரைவாலி, தினை போன்ற சிறுதானியங்களை கொண்டு செயற்கை ரசாயணங்களை தவிர்த்து இயற்கையான முறையில் கார வகைகள், பிஸ்கட் வகைகள், இனிப்பு வகைகள் தயாரித்து அவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருமானம் ஈட்டுவது குறித்தும் பயிற்சியும் வழங்கப்படுகிறது. அதேபோல், நவீன முறையில் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வளர்ப்பு, கறவை மாடுகள் வளர்த்து பால் சம்பந்தமான மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல், கோழிப்பண்ணைகள் அமைத்தல், பண்ணைக் கழிவுகளை கொண்டு மண்புழு உரம் தயாரித்தல், காளான் வளர்த்தல், காய்கறி பயிர்களில் துல்லியம் பண்ணையம் அமைத்து அதிக வருவாய் ஈட்டுவது தொடர்பாக பயிற்சி அளிக்கப் படுகிறது. எனவே இம்முகாமில் பண்ணை மகளிர் குழுக்கள் பங்கேற்று

சிறந்த முறையில் பயிற்சி பெற்று வேளாண் தொழில்கள் சார்ந்த தொழில்கள் தொடங்கி அதிக வருவாயை ஈட்டி தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இப் பயிற்சி முகாமில் வேளாண் துறை இணை இயக்குநர் சுப்பையா, வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் வே.பால்பாண்டி, உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் செண்பகராஜ், வேளாண் திட்ட வணிக அலுவலர் முத்துமுனியாண்டி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்(பொறுப்பு) ராதாகிருஷ்ணன் மற்றும் பண்ணை மகளிர் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் மணிசேகரன், காரியாபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரமகாலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.

## உதகையில் கன மழை

உதகையில் கோடை சீசனை வரவேற்கும் வகையில், சீசனுக்கு முந்தைய காலத்தில் பெய்யும் சம்மர் ஷவர்ஸ் மழை உதகையில் செவ்வாய்க்கிழமை பெய்தது. வேலிவியூ பகுதியிலிருந்து தலைக்குந்தா வரையிலான அனைத்து இடங்களிலும் சுமார் 2 மணி நேரம் பெய்த மழை உதகை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பகல் 1 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை பரவலாக பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக விவசாயிகளும், சுற்றுலாப்பயணிகளும் பெரும் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பப்பாளியால் நல்ல பலனுண்டு

உழுபவன் கணக்குப்பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்பது பழமொழி. பருவமழையையே நம்பியுள்ள நம் விவசாயிகளின் நிலை இந்த அளவில் தான் உள்ளது. முந்தைய காலங்களை போலின்றி, பருவநிலை மாறுபாட்டால் சாகுபடி முறையையும் மாற்ற வேண்டியுள்ளது. இருப்பினும் இயற்கையுடன் நடக்கும் போராட்டத்தில் தோற்கும் பல விவசாயிகள், கடன் வாங்கி சாகுபடி செய்தும் கண்ணீரில் தள்ளாடுவதாய் அமைந்து விடுகிறது. இந்த போராட்டத்திலும் புத்திசாலி விவசாயிகள் தனி முத்திரை பதித்து விடுகின்றனர். அவர்களில் ஒருவர் பப்பாளி சாகுபடியில் முத்திரை பதித்த கன்னிவாடி மணியக்காரன்பட்டி விவசாயி முத்துக்காளை, 43. **அவர் கூறியதாவது:** முக அழகுப்பூச்சு, உடல் உள்உறுப்புகளை சுத்தம் செய்யும் மருந்துப்பொருள் தயாரிப்பில் பப்பாளி பால் மற்றும் பழம் முக்கிய இடம் பெறுகிறது. தனியார் கம்பெனி துணையுடன் பப்பாளி சாகுபடி மேற்கொண்டுள்ளேன். அந்த கம்பெனி நாற்றை எனது நிலத்தில் வளர்த்து வருகிறேன். நாற்று ஒன்றுக்கு ரூ.5.30 என நிர்ணயித்து, முதலில் ரூ.2.30 மட்டும் செலுத்தினேன். பப்பாளி பால் மற்றும் பழங்களை சம்பந்தப்பட்ட கம்பெனியினர் வாங்கிக் கொள்கின்றனர். அதற்கான விலையை மீதி தொகைக்கு பிடித்துக் கொள்கின்றனர். நடவுக்குப்பின் 160 நாளில் இருந்து 18 மாதங்கள் வரை பப்பாளி பலனளிக்கும். குறைந்தபட்சம் மூன்றடி உயரத்திலேயே பழங்கள் உருவாகின்றன. காய் பருத்து வரும்போது, அவ்வப்போது அதனை கீறி பால் வடித்து, தட்டுகளில் சேகரித்து அவர்களிடம் கொடுப்பேன். ஒருவார இடைவெளியில் மீண்டும் அதே பழத்தில் இருந்து பால் வடிக்கப் படுகிறது. இந்த பாலுக்கு லிட்டர் ரூ.112 என கணக்கிட்டுக்

கொள்கின்றனர். இந்த தொகையை கொண்டு நாற்றுகளுக்கான தொகை கழிந்தபின், நமக்கு லாபம் கிடைக்கும். ஆறு வாரம் முதல் தண்ணீர், உரம், பராமரிப்பிற்கேற்ப கூடுதலாக பலன் கிடைக்கும். பால் வடிக்கப்பட்ட பின், இறுதியில் பழங்களை கிலோவிற்கு ரூ.3 விலையில் அந்நிறுவனமே எடுத்துக் கொள்கிறது. நாற்றுகள், சாகுபடி தொழில்நுட்பங்கள், பால் எடுக்கும் உபகரணங்கள், களப்பணியாளர் ஆலோசனை போன்ற வற்றையும் அந்நிறுவனமே ஏற்கிறது. ஒரு ஏக்கரில் சாகுபடி செய்த மரங்கள் மூலம் இரு ஆண்டுகளில் 1500 முதல் 2000 லிட்டர் பாலும், 80 முதல் 100 டன் பழமும் பெறலாம். பால் மூலம் ரூ.84 ஆயிரம், பழங்கள் மூலம் ரூ.1.20லட்சம் கிடைக்கும், என்றார். இதுபற்றி அறிய 97513-09963ல் தொடர்பு கொள்ளலாம். **-எல்.தாமோதரன், கன்னிவாடி.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>

**புதிய வெளியீடுகள்** : த.வே.பல்கலைக்கழகம் சமீபத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கி வெளியிட்டுள்ள இரகங்கள் மற்றும் கருவிகள்.

**எம்.டி.யு.1 ரக கொத்தவரை** : வயது 90-100 நாட்கள் மகசூல் 300 - 350 கிராம் / செடி சிறப்பு இயல்புகள் ஒவ்வொரு காயும் 14 செ.மீ. நீளம் உடையது. ஒவ்வொரு செடியிலும் 150 முதல் 175 காய்கள் வரை காய்க்கும். பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவு. குறைவான பாசனத்திலும், மானாவாரியிலும் நல்ல மகசூல் தரவல்லது. மதுரை மாவட்ட விவசாயிகளின் காய்கறி மகசூலில், இந்த கொத்தவரை ரகம் சாதனை புரியும் என எதிர்பார்க்கலாம். எக்டருக்கு 16 டன் வரை மகசூல் கிடைக்கும். ஒரு எக்டருக்கு 7 கிலோ விதை தேவைப்படும். **வி.பி.எம்.5 வீரிய ஒட்டு ரக தென்னை** : ஆண்டுக்கு 161 காய்கள் மகசூலாகக் கொடுக்கிறது. நான்கு வருட முடிவில் பூக்கும் திறன் கொண்டது. ஒரு எக்டரில் சுமார் 28 ஆயிரத்து 175 காய்கள்

மகசூலாக கிடைக்கும். கொப்பரை என்றால் 422 டன் அளவுக்கு கிடைக்கும். இளம் காய்கள் இளநீருக்கு உகந்தது. ஒரு காயிலிருந்து 285 மிலி இளநீர் கிடைக்கும். இளநீர் 4.8 பிரிக்ஸ் அளவுடன் அதிக இனிப்புச் சுவையுடன் இருக்கும். மானாவாரிக்கு ஏற்ற ரகம்.

**கருவிகள்:**

டிராக்டரால் இயங்கும் மஞ்சள் கரணை விதைக்கும் கருவி : இதனை 35 முதல் 45 HP திறன் கொண்ட டிராக்டர் மூலம் இயக்க முடியும். ஒரே நேரத்தில் மூன்று சால்களில் சீரான இடைவெளியில் மஞ்சள் கரணை களை விதைக்க முடியும். சால்களுக்கு இடையேயான தூரத்தை தேவைக்கேற்றவாறு மாற்றியமைக்க முடியும். இக்கருவியைக் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு எக்டர் பரப்பில் விதைக்கலாம். இதன் விலை ரூ.50 ஆயிரம்.

**டிராக்டரால் இழுக்கப்படும் இரு சக்கரப்பெட்டிக்கு திரவ ஆற்றலால் இயங்கும் தடுப்புக்கருவி** : (Hydraulic brake for two wheel tractor trailer System) 4/2 நேரடி மின்னோட்டத் தடுப்பானால் இணைக்கப்பட்டுள்ள இந்தக் கருவி, டிராக்டர் ஓட்டுனரின் கட்டுப்பாட்டில் இருக்கும். தடுப்புக்கருவியின் மிதிக் கட்டையை அழுத்தும் போது, சக்கரத்தில் இணைக்கப்பட்ட உருளை வடிவ கருவியின் உதவியுடன் பெட்டி நிறுத்தம் செய்யப்படுகிறது. இதன் விலை ரூ.41 ஆயிரம். **தொடர்புக்கு :** பயிர் இரகங்கள் பற்றிய சந்தேகங்களுக்கு "இயக்குனர், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. போன் : 0422 - 661 1318, 661 1215. கருவிகள் தொடர்பான சந்தேகங்களுக்கு - முதல்வர், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422-6611255,6611253.

**மயில் இனப்பெருக்கம் மற்றும் பழக்க வழக்கங்கள் :** மயில்கள் சிறு

குழுக்களாக வாழும் இயல்புடையவை. ஒவ்வொரு குழுவிலும் 3 முதல் 5 பெண் மயில்களும் ஒரு ஆண் மயிலும் இருக்கும். இனப்பெருக்க காலத்தில் இவை அனைத்தும் ஒன்றாக இணைந்து காணப்படும். அதன் பின் பெண் மயில்கள் முட்டையிட ஆரம்பிக்கும். இவை ஓர் இனப்பெருக்க காலத்தில் 8 முட்டைகள் இடும். இம்முட்டைகள் கோழி முட்டைகளை விட பெரியதாக இருக்கும். முட்டையானது பெண் மயில்களாலேயே அடைகாக்கப்படுகிறது. அடைக்காலம் 28 நாட்கள். குஞ்சுகள் பொறித்த உடனேயே அவற்றின் தாயை பின் தொடர்கின்றன. மயில்கள் பெரும்பாலும் புதர்களிலேயே முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும். குஞ்சுகள் அனைத்தும் நேர்கோட்டில் ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்துச் செல்லும். பெரும்பாலும் மயில்களின் இனப்பெருக்கம் மழையினைச் சார்ந்தே உள்ளது. இந்தியாவில் ஏப்ரல் - மே மற்றும் அக்டோபர் - நவம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறுகிறது. மயில்கள் ஓர் அனைத்துண்ணி வகையைச் சார்ந்ததாகும். இவை விதைகள், பூச்சிகள், பழங்கள், ஊர்வன மற்றும் சிறிய பாலூட்டிகளை உண்ணும். மயில்கள் விளைநிலங்களில் வசிக்கும்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>இயற்கை வழி வேளாண்மை முழுமையாக அறிய சில வழிகள்</u>

எங்கு பார்த்தாலும் இயற்கை விவசாயம் எனும் அங்கக விவசாயம் பற்றிய பேச்சாக இருக்கிறது. கேரள அரசு 2016ல் தங்கள் மாநிலம் ""இயற்கை விவசாய மாநிலம்" ஆகும் என அறிவித்து விட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இயற்கை விவசாய பயிற்சிகள் அளிக்க தொடங்கி விட்டது. இந்த இயற்கை வழி விவசாயம் பற்றி அறிய என்ன செய்ய வேண்டும். இதன் நுட்பங்கள் எவை? என அறிவோம். இதன் பிரிவுகள். இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள், உயிராற்றல் வேளாண்மை, மக்கு உர உத்தி கள், உரம் அல்லது எருவிடுதல், பயிர் பாதுகாப்பு, அங்கக சான்றளிப்பு, அறுவடை சார் தொழில்நுட்பங்கள்,

சந்தைப்படுத்துதல் என பல பிரிவுகள் உள்ளன. முழுமையாக அறிய : www.agritech.tnau.ac.in பாருங்கள். அகில இந்திய அங்கக விவசாயிகள் சங்கம் www.aiosindia.com பார்த்து உறுப்பினர் ஆகிடுங்கள். www.tnucd.net, www.ofai.org, www.ams.usda.gov, www.docnet.nic.in, www.ota.com, www.nabard.org ஆகிய வலைதளம் பாருங்கள். பயிற்சி பெறுங்கள். இயற்கை வழி வேளாண்மை தொடங்குங்கள்.

**- எம்.ஞானசேகர், விவசாயஆலோசகர் 93807 55629**

## திருவள்ளூரில் பலாப்பழம் விற்பனை

திருவள்ளூர்: கோடைக்கால பழமான பலாப்பழம், திருவள்ளூரில் விற்பனைக்காக குவிக்கப்பட்டு உள்ளது. முக்கனிகளில் ஒன்று பலா. கோடை காலத்தில் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வரும். கோடை துவங்க உள்ள நிலையில், பலாப்பழம் திருவள்ளூரில் கடந்த சில நாட்களாக விற்பனைக்காக குவிந்து உள்ளது. இதுகுறித்து, பலாப்பழ விற்பனையில் ஈடுபட்டவர் கூறுகையில், "திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து பாலப்பழத்தை வரவழைத்து உள்ளோம். ஒரு பழத்தின் விலை, அதன் அளவிற்கு ஏற்ப, 50 ரூபாய் முதல், 300 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். பலாப்பழம் மட்டுமல்லாமல், பலா கொட்டையும் உணவு பொருளாக பயன்படுத்தப்படுகிறது" என்றார். சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலையோரம், விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பலாப்பழத்தை பகுதிவாசிகளும், பொதுமக்களும் வாங்கிச் செல்கின்றனர்.

## கால்நடை மருத்துவ முகாம்

திண்டுக்கல்: திண்டுக்கல் சிறுமலைபுதூரில், கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. துணை இயக்குனர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் ராமசாமி, ஊராட்சி தலைவர் தர்மர், இயக்க ஒருங்கிணைப்பாளர் லாசரஸ்ராஜ்குமார், பகுதி ஒருங்கிணைப்பாளர்

சாவித்திரி பங்கேற்றனர். உதவி மருத்துவர்கள் நாகஜோதி, ஸ்ரீதர் சிகிச்சை அளித்தனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி வழங்கல்

திண்டுக்கல்: திண்டுக்கல் மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டியில் அஸ்காட் திட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய்தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. முகாமிற்கு திண்டுக்கல் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் விக்டர் ஜெயராஜ் தலைமை வகித்தார். குரும்பட்டி ஊராட்சி தலைவர் வள்ளிப்பாண்டி, துணை தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தனர். கால்நடைகளுக்கு தடுப்பூசிகளை பாலகிருஷ்ணா புரம் கால்நடை மருந்தகம் உதவி டாக்டர் ராஜேஷ்குமார். உதவியாளர் ஆறுமுகம் வழங்கினர்.

## மக்காசோளம் வரத்து அதிகரிப்பு

சின்னசேலம்;சின்னசேலம் மார்க்கட் கமிட்டிக்கு மக்காசோளம் வரத்து அதிகரித்தது.சின்னசேலம் மார்க்கட் கமிட்டிக்கு நேற்று முன் தினம் 700 மூட்டைகள் மக்காச்சோளம் வந்தன. அதிகபட்ச விலை1247 ரூபாய்க்கும். குறைந்தபட்ச விலை 1230 ரூபாய்க்கும் விற்றது. கடந்த வாரம் 2930 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூபாய் 35 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஆகும். உளுந்து 5 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூபாய் 30 ஆயிரம் ரூபாய் ஆகும்.

## தர்மபுரி மாவட்டத்தில் மழை; விவசாயிகள், மக்கள் மகிழ்ச்சி

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று காலை பெய்த திடீர் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இதனால், பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் ஒரு சில

நாட்களாக, வெயிலின் தாக்கம் குறைந்ததுடன், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.நேற்று காலை, 9 மணிக்கு பென்னாகரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில், திடீரென பெய்த மழை, 15 நிமிடம் நீடித்தது. இதனால், இப்பகுதி பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதே போன்று நேற்று காலை, 9.45 மணி முதல் பாலக்கோடு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காலை, 10.20 மணி வரை மழை பெய்தது. இதனால், பாலக்கோட்டில் உள்ள சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில், மழை நீர் குளம் போல் தேங்கியது. அதனை தொடர்ந்து லேசாக வெயில் அடித்த போதும், இப்பகுதியில், குளுமையான சீதோஷ்ண நிலை காணப்பட்டதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த மழை கோடை உழவுக்கு போதுமானதாக இருந்தது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.நேற்று மாலை தர்மபுரி நகர், ஒட்டப்பட்டி தொழிற்மையம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பெய்தது.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வயிறா...வசதியா?**

தமிழ்நாட்டில் 9 லட்சம் பேர் விவசாயத்தை விட்டு வெளியேறி விட்டனர். கடந்த 2011ல் தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது கண்டறியப்பட்ட புள்ளி விவரம் இது. தற்போது இந்த எண்ணிக்கை மேலும் கொஞ்சம் அதிகரித்திருக்கலாம். விவசாயத்தை கைவிட்டவர்கள் நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். ‘‘சுழன்றும் ஏர் பின்னது உலகம்’’ என்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப அனைவரும் விவசாயத்தை மையமாக கொண்டு தான் வாழ்கிறார்கள் என்பது இப்போது பொய்யாகும் நிலை உருவாகி வருகிறது. விவசாயிகள் மட்டுமல்ல,

விவசாயமும் சேர்ந்து வெளியேறும் நிலை உருவாகி விட்டது. பாரம்பரிய விவசாயத்தை கைவிட்டு பணப்பயிர் சாகுபடி முறைக்கு மாறியபோது விவசாயத்திற்கு முதல் அடி விழுந்தது. லாபத்தை எதிர்பார்த்த விவசாயிகள் கடனாளியாகினர். விளைபொருட்களுக்கும் கட்டுபடியான விலை கிடைப்பதில்லை. விவசாய வேலைக்கும் ஆள் கிடைப்பதில்லை. அதோடு வளரும் தலைமுறையிடம் விவசாய தொழில் மீதான ஈர்ப்பும் குறைந்தது. எல்லாமே சேர்ந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் தொழிற்சாலைகளாகவும், வீட்டுமனைகளாகவும் உருமாறி விட்டன. இதை எல்லாம் தடுக்கவேண்டிய அரசாங்கங்களும் கண்டுகொள்ளவில்லை. ‘குதிரை கீழே தள்ளியதுமில்லாமல் குழியும் பறிக்கும் செயலாக’ விவசாயிகளிடமிருந்து நிலங்களை பறிக்கும் நடவடிக்கையில் அரசாங்கமே நேரடியாக இறங்கியுள்ளது. மீத்தேன் எடுக்கும் திட்டம், நியூட்ரினோ திட்டம், தொழிற்பேட்டைகள் அமைப்பது, நெடுஞ்சாலைகள் அமைப்பது என அரசின் பல்வேறு தேவைகளுக்கு மீதமுள்ள நிலங்களை குறி வைக்கும் போக்கு அதிகரித்து விட்டது. தமிழகத்தில் தற்போது ஏற்பட்டு வரும் இந்த ஆபத்து, ஏற்கனவே பல வடமாநிலங்களில் அரங்கேறியது. ஆரம்பத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, காலம் முழுவதும் கடனாளியாக இருப்பதை காட்டிலும் மீதமுள்ள காலமேனும் நிம்மதியாக வாழலாம் என லட்சங்களுக்கு மயங்கி நிலத்தை இழந்தனர். பன்னாட்டு நிறுவனங்களுக்கும், அரசு திட்டங்களுக்கும் நிலத்தை கொடுத்த விவசாயிகள் பலர் தற்போது கொஞ்ச நிம்மதியையும் இழந்து தவிக்கின்றனர். பல திட்டங்களுக்கு கையகப்படுத்த நிலங்களின் உரிமையாளர்களுக்கு முழுமையான இழப்பீடு கூட கிடைக்காமல் கூலிக்கு வேலை தேடி செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமிழகத்திலும் தற்போது அத்தகைய ஆபத்தான போக்கு அதிகரித்து வருகிறது. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தி தரும் நடவடிக்கைகள் மாநிலமெங்கும்

பரவலாக நடந்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் கார் தொழிற்சாலை அமைக்க 2300 ஏக்கர், நெல்லை மாவட்டம் சங்கரன் கோயில் அருகே சோலார் திட்டத்திற்காக 1,500 ஏக்கர் என விளைநிலங் களை கையகப்படுத்தும் பணி தொடங்கியுள்ளது. அதுவும் நீர் ஆதாரத்தோடு விளங்கும் விளைநிலங்களை குறிவைத்து கைப்பற்றும் ஆபத்தான போக்கு நிலவுகிறது என்பது தான் கவலையூட்டும் விஷயம். தொழில்வளர்ச்சி தேவை என்பதில் யாருக்கும் மாற்று கருத்து இல்லை. நாட்டின் 120 கோடி மக்களுக்கு உணவளிக்கும் விவசாயத்துறை உள்நாட்டு உற்பத்தியில் மொத்தம் 14 சதவீதம் மட்டுமே பங்களிப்பு செலுத்துகிறது. 60 சதவீத மக்கள் விவசாயத்தால் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். உணவுக்கும், வேலைவாய்ப்புக்கும் பங்கம் வரக்கூடாது என்றால் விவசாயத்தை மட்டுமல்ல, விவசாயிகளையும் பாதுகாப்பது அவசியம். சந்தை பொருளாதாரம் என்னும் ஆக்டோபஸ் கரங்களுக்குள் சிக்கினால் நமது வசதிகள் பெருகலாம். வயிற்று பசியை தீர்க்கமுடியாது. பசியை தீர்க்க விவசாயம் எப்போதும் செழிப்பாக இருக்கவேண்டும்.

## <u>மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர அழைப்பு</u>

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர மாவட்ட கலெக்டர் ராஜேஷ் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஆரம்பித்து பதிவு செய்து, செயல்பட்டு வருகிறது. இம்முகமையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மீன் வளர்ப்போர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து அரசு நலத்திட்டங்கள் பெற்று வருவாயினை பெருக்கி, மாவட்டத்தின் மீன் உற்பத்தியினையும் பெருக்க வேண்டும் என்ற நோக்கில் அனைத்து மீன்வளர்ப்போரும் இம்முகமை யில் உறுப்பினராக சேர்ந்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்

படுகிறார்கள். எனவே தகுதியான, மீன்வளர்ப்போர்கள் முகமை உறுப்பினர்களாக பதிவு செய்ய கிருஷ்ணகிரி மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம், பாம்பாறு அணை, பாரூர், கிருஷ்ணகிரி அணை ஆகிய இடங்களில் உள்ள மீன் வள ஆய்வாளர்கள் அலுவலகங்கள், ஓசூர் மீன்வள சார் ஆய்வாளர் அலுவலகம் ஆகியவற்றை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>அந்தியூர் விற்பனை கூடத்தில் ரூ.1 கோடிக்கு விளைபொருட்கள் ஏலம்</u>

அந்தியூர், : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று நடந்த ஏலத்திற்கு 30 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்து இருந்தன. இதில் தேங்காய் ஒன்று ரூ.4.70 முதல் 15.50 வரை மொத்தம் ரூ.2 லட்சத்து 75 ஆயிரத்துக்கு ஏலம் போனது. தேங்காய்கள் பருப்பு 300 மூட்டைகள் வந்து இருந்தன. கிலோ ரூ.72.71 முதல் 77.76 வரை ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் சிவப்பு எள் 20 மூட்டைகள் கிலோ ரூ.60.69 முதல் 71.19 வரை ரூ.1 லட்சத்திற்கும் ஆமணக்கு 10 மூட்டைகள் கிலோ ரூ.35.26 முதல் 52.59 வரை ரூ.25 ஆயிரத்திறக்கும், மக்காச்சோளம் 20 மூட்டைகள், கிலோ ரூ.12.29 முதல் 12.71 வரை ரூ.25 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. நிலக்கடலை 600 மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன. இதில் பச்சை நிலக்கடலை கிலோ ரூ. 23.50 முதல் 29.60 வரையிலும், காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ.40 முதல் 50 வரை ரூ.9 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் நரிபயிறு 17 மூட்டைகள் கிலோ ரூ.51.06 முதல் 54.49 வரை ரூ.50 ஆயிரம் ரூபாய்க்கும் துவரை 200 மூட்டைகள் கிலோ ரூ.58.01 முதல் 62.10 வரை ரூ.12 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் பச்சை பயிறு 6 மூட்டைகள் கிலோ ரூ.23.86 முதல் 40 வரை ரூ.15 ஆயிரத்திற்கும் ஏலம் போனது. பருத்தி பி.டி காட்டன் ரகம் 5 ஆயிரத்து 500 மூட்டைகள் கிலோ ரூ.40 முதல் 47.50 வரை ரூ.75 லட்சத்திற்கு ஏலம்

போனது. மொத்த விவசாய விளைபொருட்கள் ரூ.1 கோடியே 3 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

**<u>தேன் உற்பத்திக்கு உதவும் தாவரங்கள்</u>**

உடுமலை : தேன் உற்பத்திக்கு உதவும் ஏராளமான மரங்கள், தாவரங்கள் உள்ளன என்று தோட்டக்கலைத்துறை தெளிவு படுத்தி உள்ளது. உடுமலை வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன் கூறியுள்ளதாவது: மூலிகை பயிர்கள், சீரகம் மற்றும் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் கிடைக்கும் தேன் தரமானதாக உள்ளதால் அதற்கு அதிக விலை கிடைக்கிறது. பல பகுதிகளில் இயற்கையாக தேன் கிடைக்க வாய்ப்பு இருந்தாலும், செயற்கையாக தேனீப் பெட்டிகள் அமைத்து வைத்து தேன் பெறலாம். ஒரு ஏக்கரில் 20 பெட்டிகள் வைத்து தேனீக்கள் உதவியுடன் தேன் அறுவடை செய்தால் நல்ல வருமானம் கிடைக்கும். தேன் பெற போதிய தாவரங்கள் இல்லாதவர்கள் சிறு,சிறு பாத்திகளில் மதுரம் தரும் தாவரங்களை வளர்க்கலாம். குறிப்பாக மா, புளி, வேம்பு, இலவன், முருங்கை, ரப்பர், அகத்தி, அரப்பு, புங்கன், அரசு, சிசு, அர்ச்சனை தீக்குச்சி மரம், இலந்தை, குதிரை மசால், காப்பி ஆகிய தாவரங்களை வளர்க்கலாம். இந்த தாவரங்களில் உள்ள தேனை தேனீக்கள் உறிஞ்சி அயல் மகரந்த சேர்க்கைக்கு உதவுவதால் தென்னை, பனை, வேல், பாக்கு, தக்காளி, சோளம், கம்பு, கத்தரி, பூசணி போன்றவற்றை தாராளமாக சாகுபடி செய்யலாம். அதுமட்டுமல்ல மதுரம் மற்றும் மகரந்தம் தரும் பயிர்கள் உள்ளவர்கள் அதாவது முருங்கை, வாழை, கொய்யா, சூரியகாந்தி, எள், கடுகு, தைலமரம், சப்போட்டா, வெங்காயம்

சாகுபடி செய்துள்ளவர்கள் தேனீப்பெட்டிகள் வைத்து நல்ல வருமானம் பார்க்கலாம். இதுகுறித்த மேலும் விவரம் தேவைப்படுவோர் 98420 07125 என்ற செல்போனில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு டாக்டர் இளங்கோவன் தெரிவித்திருக்கிறார்.

## களை வெட்டும் கருவி அறிமுகம்

உடுமலை : மழை காலங்களில் செடி,கொடிகள் தழைத்து வளர்ந்து விவசாய பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றை வெட்டி அழிக்க புதிய கருவி நடைமுறைக்கு வந்துள்ளது. இதுகுறித்து உடுமலை வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் டாக்டர் இளங்கோவன் கூறியுள்ளதாவது: களைச்செடிகளை வெட்டும் இந்த கருவிக்கு பிரஷ்கட்டர் மற்றும் பவர் லீடர் என்று பெயர். 6 கிலோ எடையுள்ள இந்த கருவியை மருந்து தெளிப்பான் போல் தோளில் மாட்டிக் கொண்டு களைகளை வெட்டலாம். 20 பேர் 8 மணி நேரத்தில் முடிக்கும் காரியத்தை இக்கருவி 4 மணி நேரத்தில் முடித்து விடும். மல்பரி, மக்காச்சோளம், மாட்டுத்தீவனப் பயிர் போன்றவற்றையும் எளிதில் அறுவடை செய்யலாம். காய்கறி செடிகளுக்கிடையே கொத்து கொத்தாய் வளரும் களைகளையும் அழிக்கலாம். ஒரு லிட்டர் பெட்ரோல் மூலம் 1.25 மணி நேரம் இக்கருவியை இயங்கலாம். இக்கருவி குறித்த கருத்துப்பட கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்படும்.இவ்வாறு இளங்கோவன் கூறியுள்ளார்.

## குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 81 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மை யத்தில் இந்தாண்டுக்கான 9வது ஏலம் கடந்த வியா ழன், வெள்ளி ஆகிய நாட் களில்நடந்தது.இதில் மொத் தம் 13.12 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9.19 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.99 லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்தாலும் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். இதனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 விலை உயர்ந்தது. இதில் 81 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.54, உயர்வகை ரூ.100 முதல் ரூ.165, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.62 முதல் ரூ.64, உயர் ரகம் ரூ.110 முதல் ரூ.175 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.248, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.255 விலை கிடைத்தது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதில் மொத்தம் 10.99 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

**<u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் திட்டம் துவக்கம்</u>**

கரூர்,: கரூர் மாவட்டத்தில் கோமாரிநோய் தடுப்பூசி போடும் திட்டம் துவங்கப்பட்டது. கரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை கரூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகோதூர் மற்றும் அரிக்காரம்பாளையம் ஆகிய பகுதிகளில் துவங்கி வைத்து கலெக்டர் ஜெயந்தி பேசுகையில், மூன்று வயதுக்கு மேற்பட்ட கன்றுகள் முதல் அனைத்து பசு மற்றும் எருமைகளுக்கு தவறாமல் கோமாரி நோய் தடுப்பூசி ஆண்டுக்கு இருமுறை மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் போடப்பட வேண்டும். கோமாரி நோயினை தடுப்பதற்கு தடுப்பூசி போடுவது ஒன்றே வழிமுறையாகும். தடுப்பூசி போடப்படாத கால்நடைகளை கோமாரி நோய் தாக்குதலால் சினை மாடுகளில் வேலைத்திறன் குறைவு, மலட்டுத்தன்மை, பால் உற்பத்திக் குறைவு போன்ற பொருளாதார இழப்பினை கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்ள நேரிடும். எனவே, கரூர் மாவட்டத்தில் உள்ள 1,87,550 கால்நடைகளுக்கும் விடுபடாமல் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தங்களது

கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு, கரூர் மாவட்டத்தினை கோமாரி நோய் இல்லாத மாவட்டமாக உருவாக்கிட வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் பழனிவேல், ஆர்டிஓ அஜய் சீனிவாசன், உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், முருகேசன், குழந்தைசாமி, நகராட்சி ஆணையர் வரதராஜ், நகர் நல மருத்துவர் ஹேமசந்த்காந்தி, மருத்துவர் கன்னியப்பன் உட்பட பலர் உடனிருந்தனர்.

## திருச்சி மாவட்டத்தில் 136 நீர்வடிப்பகுதிகளில் ரூ.3.32 கோடியில் தடுப்பணை வாய்க்கால் ஓடைகளில் தடுப்பு சுவர்

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் 136 நீர்வடிப்பகுதியில் ரூ.3.32 கோடி மதிப்பில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் ல் விளை நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வண்ணம் வாய்க்கால் ஓடைகளில் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் தடுப்பணைகள், பண்ணைக்குட்டை, கசிவுநீர் குட்டை போன்ற குடிநீர் ஆதார மேம்பாட்டு பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், தடுப்பு சுவர், அமுங்குகுட்டை, பண்ணை குட்டை, கசிவுநீர் குட்டை, தடுப்பணைகள், கால்நடை குட்டை, வரத்து கால்வாய் அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர்வாருதல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு போன்ற பணிகள் பயனாளிகளின் 5 சதவீத பங்கு தொகையுடன் செயல்படுத்தப்படுகிறது. புள்ளம்பாடி, துறையூர், மருங்காபுரி, தொட்டியம், வையம்பட்டி, முசிறி, தா.பேட்டை, மணப்பாறை மற்றும் உப்பிலியபுரம் ஆகிய 9 வட்டாரங்களில் தடுப்பணைகள், பண்ணைக்குட்டை, கசிவுநீர் குட்டை போன்ற குடிநீர் ஆதார மேம்பாட்டு பணிகள் 136 நீர்வடிப்பகுதிகளில் ரூ.3.32 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தொட்டியம்

வட்டத்தில் கிடாரம், முருங்கை, பிடாரமங்கலம், நாகையநல்லூர், எம்.களத்தூர், வால்வேல் புதூர், ஏளூர்பட்டி மற்றும் தோளூபட்டி ஆகிய கிராமங்களுக்கென 10 எண்கள் கொண்ட நீர்வடிப்பகுதிகளுக்கு ரூ.3.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்து வேளாண் உதவி செயற்பொறியாளர் பிரசாத் கூறுகையில், நீர்வடிப்பகுதியில் உள்ள ஓடைகள் மழை வெள்ளத்தால் சிதைந்து மண் அரிமானம் ஏற்படுவது ஓடையின் குறுக்கே ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதன் மூலம் தடுக்கப்படுகிறது. மேலும் மழைநீர் ஓடையில் ஆங்காங்கே சேமிக்கப்பட்டு நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்திட உதவுகிறது. அதன்படி கிடாரம் நீர்வடிப்பகுதியில் 3 தடுப்பணைகள் ரூ.3.75லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. ஒரு ஓடையின் அருகில் அரசு புறம்போக்கு நிலம் இருப்பின் அதில் அமைக்கப்படும் சிறிய அளவிலான அமுங்கு குட்டைகள் ஓடையில் வரும் வெள்ளத்தின் வேகத்தினை கட்டுப்படுத்துவதோடு மண் அரிமானத்தையும் தடுக்கிறது. மண் அரிமானம் தடுக்கப்படுவதால் ஓடையின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள நீர் ஆதாரங்களான குளம், குட்டை போன்றவற்றில் வண்டல் படிவம் கட்டுப்படுத்தப்பட்டு குளங்களின் கொள்ளளவு நிலைப்படுத்தப்படுகிறது. வெள்ளப்பெருக்கின் போது அருகில் உள்ள விளை நிலங்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் வாய்க்கால் ஓடைகளில் தடுப்பு சுவர் அமைக்கப்படுகிறது என்றார்.

## <u>பெரம்பலூர் அருகே 7 அடி நீள புடலங்காய்: விவசாயி சாதனை</u>

பெரம்பலூர், : பெரம்பலூர் அருகே 7 அடி நீளத்திற்குப் புடலங்காய் வளர்த்து விவசாயி ஒருவர் சாதனை புரிந்துள்ளார். அவரது தோட்டத்து பந்தலில் பச்சைப் பாம்புகளைப்போல் புடலங்காய்கள் தொங்குகின்றன. நகர் மற்றும் கிராமப்புறங்களில் மக்கள் பெரிதும் விரும்புகிற காய்கறிகளில் புடலங்காய் முக்கியமானதாகும். இதனை தென்னிந்தியா வில் தான் அதிகம் பேர் உணவில் சேர்க்கின்றனர். புடலையில், இளத்தல், கொத்துப்புடல், நாய்ப்புடல், பன்றிப்புடல், பேய்புடல் என பலவகை

இருந்தாலும் கொத்துப்புடல் மட்டுமே உணவாகப் பயன்படு கிறது. இதனை புடல், சோத்தனி, புடவல் என்ற பல பெயர்களில் அழைக்கின்றனர். புடலங்காயில் நன்கு முற்றிய காயை உண்பது நல்லதல்ல. பிஞ்சு அல்லது நடுத்தர முதிர்ச்சியுள்ள காய்களில் உட்புறமுள்ள விதைகளைநீக்கி சதைப்பகுதியை மட்டுமே பயன்படுத்தவேண்டும். புடலங்காய் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். தேகம் மெலிந்து இருப்பவர்கள் அடிக்கடி புடலங்காயை உணவில் சேர்த்து வந்தால், உடல் பருமனடையும். அஜீரணக் கோளாறைப் போக்கி எளிதில் சீரணமாக்கும். நன்கு பசியைத் தூண்டும். குடல் புண்ணை ஆற்றும். வயிற்றுப்புண், தொண்டைப்புண் உள்ளவர்கள் அடிக்கடி சாப்பிட்டு வந்த ல், பாதிப்புகள் குறையும். புடலங்காய் பந்தல் அமைத்து பயிர் செய்யப்பட்டு பிஞ்சி வந்ததும் அதன்நுனியில் கல்லைக்கட்டித் தொங்கவிட்டால், ஐந்தாறு அடி நீளத்திற்கு காய்கள் நீண்டு வளரும். ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக நீளமான புடலங்காய் சாகுபடியே இல்லாமல் போய்விட்டது. சுமார் 1 முழம் நீளமுள்ள புடலங்காய்களை மட்டுமே தற்போது காண முடிகிறது. இந்நிலையில், பெரம்பலூர் அருகே எளம்பலூர் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி கணேசன் என்பவர் புறவழிச் சாலையில் பிரம்மரிஷி மலையடிவாரத்திலுள்ள தனது தோட்டத்தில் பந்தல் அமைத்து புடலங்காய் பயிரிட்டுள்ளார். இவரது தோட்ட பந்தலில் ஏழு அடி நீளமுள்ள புடலங்காய் காய்த்துள்ளது. ஏராளமான பிஞ்சுகள் 4 அடிக்கு குறை வின்றி வளர்ந்து பச்சைப் பாம்புகளைப்போல் பந்தலில் தொங்கியபடியே வளர்கிறது. ஹைபிரிட் காய்களுக்கு மத்தியில் மீண்டும் பழைய நாட்டுக் காய்களைப்பார்த்த சந்தோஷத்தில் அவ்வழியே செல்பவர்கள் உணவுக்காகவும், விதைக்காகவும் தினமும் அவற்றை விலைபேசி வாங்கிச் செல்லுகின்றனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

பொன்னமராவதி, : பொன்னமராவதி அடுத்த வலையபட்டி கோவில்பட்டியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு பொன்னமராவதி பேரூராட்சி தலைவர் ராஜா அம்பலக்காரர் தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் அழகு சுப்பையா முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் கால்நடை விவசாயிகளால் கொண்டுவரப்பட்ட 250 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட் டது. முகாமில் பேரூ ராட்சி உறுப்பினர் சின் னையா, ஆவின் கால் நடை மருத்துவர் கவிதா, கால்நடை மேற்பார்வையாளர் கருப் பையா, உதவியாளர் ராமசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்ன தாக, கால்நடை மருத்துவர் நவநீதகிருஷ்ணன் வரவேற்றார்.

## தென்னை மரத்தில் ஏற கருவி வழங்கும் விழா

வேதாரண்யம் : வேதாரண்யம் தாலுக்கா தோப்புத்துறையில் தென்னை மர நண்பர்கள் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. விவசாய சங்கத் தலைவர் ராஜன் தலைமை வகித்தார். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன ஆனந்த் வரவேற்றார். நிகழ்ச்சியில் தேத்தாக்;குடி ஊராட்சி தலைவர் கிரிதரன், தமிழ்நாடு வணிகப்பேரவை மாநில துணை ப்பொதுச்செயலாளர் முருகையன், விவசாய சங்க செயலாளர் ஒளிச்சந்திரன் கலந்து கொண்டனர். மத்திய அரசின் நேரடி திட்டத்தில் சென்னை தென் னை வளர்ச்சி வாரிய மும்,எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இந்தப் பயிற்சி யை நடத்தியது. வேதாரண்யம் தாலுகாவில் தேத்தாக்குடி கத்தரிப்புலம், தாணிக்கோட்டகம் கிராம விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் பயிற்சி குறித் தும்,தென்னை வளர்ப்பு முறைகள் குறித்தும் 5 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 18 பெண்கள் உள்பட 120 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு ரூபாய் 4,500 மதிப்புள்ள தென்னை மரம் ஏறும் கருவிகள்,சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. கருவியை கொண்டு தென்னை மரம் ஏறும் செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.ஜெயக்குமார் நன்றி கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வெள்ளரி பிஞ்சு, தர்ப்பூசணி, கிர்ணி பழம் வரத்து அதிகரிப்பு கோடை வெயிலை சமாளிக்க தயாராகிறது சென்னை</u>**



சென்னை, கோடை வெயிலை சமாளிக்கும் விதமாக கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வெள்ளரி பிஞ்சு, தர்ப்பூசணி, கிர்ணி பழம் ஆகியவை வரத்துஅதிகரித்துள்ளது.

கோடைவெயில்

கோடை காலம் விரைவில் தொடங்க உள்ளது. அதன் அறிகுறியாக நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கடுமையான வெயில் வாட்டி வதைத்து வருகிறது. சுட்டெரிக்கும் சூரியனின் கோரப்பிடியில் இருந்து தப்பிப்பதற்காக பொதுமக்கள் குளிர்பானங்கள், பழச்சாறுகள் பருகி வருகிறார்கள். மேலும் வெயிலின் உஷ்ணத்தை தணிக்கும் பழங்களையும் வாங்கி சாப்பிட்டு வருகின்றனர். வெயில் காலத்தை குறிவைத்து சில நாட்களுக்கு முன்பில் இருந்தே சாலையோரங்களில் புதிது, புதிதாக குளிர்பானங்களின் கடைகள் முளைத்துள்ளன. அந்த கடைகளில் தர்ப்பூசணி, கிர்ணி பழ ஜூஸ், கரும்புச்சாறு, இளநீர், மோர் மற்றும் குளிர்பானங்களின் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகின்றது.

வெள்ளரிபிஞ்சு-கிர்ணிபழம்

வெயில் காலம் தொடங்க உள்ள நிலையில், சென்னையில் உள்ள

கோயம்பேடு மொத்த மார்க்கெட்டுக்கு உடல் சூட்டை தணிக்கும் பல்வேறு வகையான பழங்கள் பல்வேறு இடங்களில் இருந்து வந்து குவியத்தொடங்கியுள்ளன. சூட்டை தணிப்பதில் அமோக வரவேற்பினை பெற்ற தர்ப்பூசணி, கிர்ணி பழம், வெள்ளரி பிஞ்சு, எலுமிச்சை பழம் ஆகியவை மார்க்கெட்டுக்கு கொண்டு வந்த சில மணி நேரங்களில் விற்று தீர்ந்துவிடுகிறது. தற்போது 'சீசன்' என்பதால் சில்லரை வியாபாரிகள் மொத்தமாகவாங்கிசென்றுவிடுகின்றனர்.

இளநீர்

கோயம்பேடு மார்க்கெட்டில் தர்ப்பூசணி பழம் ரகத்திற்கு ஏற்ப கிலோ ரூ.4 முதல் ரூ.7 வரையிலும், கிர்ணி பழம் கிலோ ரகத்திற்கு ஏற்ப ரூ.15 முதல் ரூ.20 வரையிலும், வெள்ளரி பிஞ்சு கிலோ ரூ.30-க்கும், எலுமிச்சை பழம் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும் மொத்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேபோன்று இளநீர் ரகத்திற்கு ஏற்ப ரூ.20 முதல் ரூ.40 வரையிலும், சிவப்பு இளநீர் ரகத்திற்கு ஏற்ப ரூ.30 முதல் ரூ.45 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.வெயில் அடிக்கத் தொடங்கியுள்ளதால் இயற்கையின் அருட்கொடையான பழங்கள் மற்றும் இளநீருக்கு கடுமையான கிராக்கி நிலவி வருகிறது.

எலுமிச்சைபழம்

இதுகுறித்து கோயம்பேடு மொத்த மார்க்கெட்டை சேர்ந்த வியாபாரிகள் கூறியதாவது:-

கோடை காலத்தின் தொடக்கமாக உடல் சூட்டை தணிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் கிர்ணி பழம், தர்ப்பூசணி பழம், எலுமிச்சை பழம், வெள்ளரி பிஞ்சு உள்ளிட்டவைகளை வியாபாரிகள் சந்தைக்கு கொண்டுவரத்தொடங்கியுள்ளனர். கிர்ணி பழம் பெரும்பாலும் ஆந்திராவில் உள்ள கடப்பா பகுதியில் பயிரிடப்படுகிறது. அங்கிருந்து நாள் ஒன்றுக்கு 150 டன் கிர்ணி பழம் கொண்டுவரப்படுகிறது. எலுமிச்சை பழம் 10 லோடு வருகிறது. கடந்த மாதம் 5 லோடுகளில் மட்டுமேகொண்டுவரப்பட்டது.

வெள்ளரிபிஞ்சு

தற்போது தேவைப்பாடு அதிகரித்துள்ளதால் வரத்து 2 மடங்கு உயர்ந்துள்ளது. தமிழகம், புதுச்சேரி மற்றும் ஆந்திராவில் இருந்து தர்ப்பூசணி 200 டன் கொண்டுவரப்படுகிறது. ஆண்டிப்பட்டியில் இருந்து வெள்ளரி பிஞ்சு வரத்தொடங்கியுள்ளது. இந்த வெள்ளரி பிஞ்சுகள் சுமார் 24 செ.மீ. நீளம் வரை வளரும். சுவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல் உடல் சூட்டை தணிக்க மிகவும் ஏதுவானது. சீசன் தொடக்கம் என்பதால் தற்போது ஒரு டன் கொண்டுவரப்படுகிறது. மேலும் வரும் நாட்களில் படிப்படியாக வெள்ளரி பிஞ்சின் வரத்து அதிகரித்துக்கொண்டே செல்லும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி கழிவுகளில் இருந்து தினமும் ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி 2 ஆயிரத்து 500 யூனிட் ஆக அதிகரிக்க திட்டம்</u>



சென்னை, கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி கழிவுகளில் இருந்து தினமும் ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை 2 ஆயிரத்து 500 யூனிட் ஆக அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

<u>காய்கறி கழிவுகள்</u>

ஆசியாவிலேயே 2–வது பெரிய மார்க்கெட் என்று பெயர் பெற்ற சென்னை கோயம்பேடு மார்க்கெட்டு 70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மார்க்கெட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மொத்த விற்பனை கடைகளும், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சில்லரை விற்பனை கடைகளும் இயங்கி வருகின்றன. கோயம்பேடு மார்க்கெட்டில் தினசரி சராசரியாக 120 முதல் 150 டன் வரை காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களின் கழிவுகள் அகற்றப்படுகிறது. இவ்வாறு வீணாகும் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்க ஆக்கப்பூர்வமான திட்டத்தை தமிழக அரசு வகுத்தது.

கழிவுகளில் இருந்து மின்சாரம்

அதன்படி ரூ.5 கோடியே 50 லட்சம் செலவில் கோயம்பேடு மார்க்கெட்டில் திடக்கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் கடந்த 2006–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 'மேசிரேட்டர்' எனப்படும் எந்திரம் மூலம் காய்கறி, பழங்கள் மற்றும் பூக்களின் கழிவுகளை கூழாக்கி அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 2011–ம் ஆண்டு மின்சார உற்பத்தி எந்திரம் பழுதாகியது. இதனையடுத்து 2½ வருடங்களாக மின்சார உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் செக் குடியரசு நாட்டில் இருந்து நவீன எந்திரம் வாங்கப்பட்டு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மீண்டும் மின் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

ஆயிரம் யூனிட் மின்சாரம்

கடந்த ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு காய்கறி கழிவுகளில் இருந்து 500 யூனிட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது மின்சார உற்பத்தி நாள் ஒன்றுக்கு ஆயிரம் யூனிட் ஆக அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் இன்னும் அதிகரிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்சார உற்பத்தி அதிகரிக்கப்படும்

இதுகுறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

கோயம்பேடு மார்க்கெட்டுக்குள் மொத்தம் 50 குப்பை தொட்டிகள் உள்ளன. இவற்றில் 120 முதல் 150 டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. தகுதியான 20 டன் குப்பைகளை மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தி வருகிறோம். ஏனெனில் வாழைத்தண்டுகள் உள்ளிட்ட சில கழிவுகளை மின்சாரம் தயாரிக்க பயன்படுத்த முடியாது.

தற்போது ஆயிரம் யூனிட் மின்சாரம் தினந்தோறும் உற்பத்தி செய்யப் படுகிறது. நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 யூனிட் மின்சாரம் தயாரிக்கவேண்டும் என்பது இலக்கு. இதனை இன்னும் 3 மாத காலத்திற்குள் நிறைவேற்றம் செய்வதற்கு தேவையான அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**ஊட்டியில் திடீர் மழை காட்டுத்தீ ஏற்படும் அபாயம் குறைந்தது**



ஊட்டியில் நேற்று மதி யம் திடீரென்று மழை பெய்தது. இதனால் இந்த ஆண்டு காட்டுத்தீ ஏற்படும் அபாயம் குறைந்து உள்ளது.

வறட்சி

நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடங்கி கடும் உறைபனிப் பொழிவு காணப்பட்டது. ஒரு சில நாட்கள் '0' செல்சியஸ் வரை வெப்பநிலையை தொட் டது. இதனால் தண்ணீர் உறைந்து பனிக்கட்டி போல் காட்சி அளித்தது. இந்த வறட்சியான கால நிலையால் புற்கள், தேயிலை செடிகள், காய்கறி செடிகள் கருகியது. மேலும் குளம், குட்டைகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. இதன் காரணமாக விவசாயிகள் தங்களது நிலங் களில் பயிரிடப்பட்டு இருந்த காய்கறி செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற் பட்டது. கடந்த சில மாதங் களாக கடும் வெயில் அடித்து வந்த நிலையில் நேற்று திடீ ரென்று ஊட்டியில் மழை பெய்தது. சிறிது நேரம் பெய்த பலத்த மழையால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

காட்டுத்தீ

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு வந்திருந்த சுற் றுலா பயணிகளும் மழையில் நனைந்தனர். மேலும் வறட்சி யால் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் நிலவி வந்தது. ஆனால் இந்த திடீர் மழையால் காட்டுத்தீ

ஏற்படும் அபாயம் குறைந்து உள்ளது. மேலும் கடும் உறை பனியால் கருகிய புற்கள், தேயிலை செடிகள் இந்த மழையால் துளிர்விட தொடங்கி உள்ளன. இன்னும் சில நாட்கள் மழை பெய்தால் நீர்நிலைகளுக்கு வரும் தண்ணீர் வரத்து அதி கரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## காலநடைகள் வளர்ப்பவர்களிடம் தடுப்பூசி போடுவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவு



தேனி, தேனி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது குறித்து கால்நடைகள் வளர்ப்பவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டு உள்ளார்.

கால்நடைகளுக்கு தடுப்பூசி

தேனி மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய்க்காணை நோய் தடுப்பூசி போடும் பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பேசினார். அவர் பேசும் போது கூறியதாவது:–

தமிழக அரசின் உத்தரவுப்படி தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கிராமங்களிலும் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்க்காணை நோய்களுக்கான தடுப்பூசி போடும் பணிகள் கடந்த 1–ந்தேதி தொடங்கி நடந்து வருகிறது. இந்த பணிகள் வருகிற 21–ந்தேதி (சனிக்கிழமை) வரை நடைபெற உள்ளது. தினமும் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விழிப்புணர்வு

விடுபட்ட கால்நடைகளுக்கு 22–ந்தேதி முதல் 30–ந்தேதி வரை தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்ளும் குழுவில் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் இடம் பெற வேண்டும். இந்த குழுவில் பயிற்சி கால்நடை மருத்துவர், ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர், பயிற்சி கால்நடை ஆய்வாளர், தனியார் செயற்கை முறை கருவூட்டாளர் ஆகியோரில் யாரேனும் ஒருவரை இணைத்துக் கொள்ளலாம். இந்த குழுவினர் ஒரு நாளைக்கு 150 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்ள வேண்டும். ஊராட்சி உதவி இயக்குனர் அலுவலக பணியாளர்களை கொண்டு வீட்டு வளர்ப்பு கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது குறித்து கால்நடை வளர்ப்பவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். முகாம் நடைபெறக் கூடிய கிராமங்களில் முன்கூட்டியே போதிய அளவில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். தேனி மாவட்டத்தில் 7–வது சுற்றாக நடந்த தடுப்பூசி போடும் பணி சிறப்பாக நடத்தப்பட்டு உள்ளது. தற்போது 8–வது சுற்றாக நடந்து வரும் பணிகளையும் சிறப்பாக நடத்தி முடிக்க கால்நடை பராமரிப்புத்துறையினர், அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் கூறினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் தனசேகரன், ஊராட்சிகள் உதவி இயக்குனர் வடிவேல், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் சேதுராமன் உள்பட கால்நடை மருத்துவ அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.